ஜநவிநோதிநி.

Janavinodini.

A POPULAR MAGAZINE

OF

AMUSING AND INSTRUCTIVE INFORMATION IN TAMIL.

(ILLUSTRATED.)

1879

Vol. X.

MADRAS:

UBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS, 1880.

JANAVINODINI 1879.

EDITOR'S NOTE.

With the present number, *Janavinodini* enters upon the tenth year of its existence, and, perhaps, a word to our subscribers and the reading public generally is due from us on this occasion.

We have reason to be gratified with the reception the Magazine has met with during its life of over nine years, and are thankful for the continued support of our old subscribers and friends, and the generous testimony given of its usefulness as a healthy Magazine of Family Reading and as the best Gift-Book of the day for Schools and for little Tamil folks Other Vernacular journals favour us from time to time by copying some of our prominent features and frequently extract articles and stories from our pages, though sometimes without an acknowledgment of their origin. A number of letters received from the Tamil districts and from other places beyond the limits of this Presidency express the good wishes of the writers for our success. Such good wishes are appreciated and serve to stimulate us to fresh exertions to popularise this Magazine.

And now, as to the Volume for 1879, it will be brought out on the same principles as the previous ones. Besides the usual contribution of literary and scientific matter with pictorial illustrations and of amusing tales and articles to entertain the young, the new volume will have a further feature added to it by the insertion of a series of papers on the romance of Indian History, a beginning being made in the present number. Some short biographies of the great and good, and articles calculated to promote a kindly regard for animals will also be introduced together with familiar essays on subjects connected with the conduct of life, and other healthy reading for all.

Space prevents us now saying more than that our determination to progress and develope is still as great as before our first issue appeared, and that we hope our readers will oblige us by making Janavinodini known amongst their friends and correspondents in the country, as we require a large increase in the number of subscribers to make this cheap Magazine a financial success beyond all doubt, and to realize the excellent purpose aimed at by the School Book and Vernacular Literature Society, which bears the cost of the publication,—namely the diffusion of useful knowledge and of the love of reading amongst the Tamil people.

ஜநவிநோதிநி.

இல. 1.] ஜனுவரி௴ 1879. [புஸ்த. X.

1879–௵த்திய ஜநவிநோதிநி.

(பத்திராதிபர் அறிக்கை.)

இந்தச் சஞ்சிகைமுதலாக ஜநவிநோதிநி பிரசுரமான பத்தாவது வருஷம் ஆரம்பமாகின்றது. இத்தருணத்தில் நமது கையொப்பக்காரருக்கும் படிக்க விருப்பமுள்ள மற்ற நாட்டாருக்கும் இரண்டொரு மொழிகள்சொல்வது உசிதமாயிருக்கின்றது.

இப்பத்திரிகை ஆரம்பமாய் ஒன்பது வருஷகாலமாக இது பலராலும் கொண்டாடப்பட்டுச் செம்மையாய் நடந்தேறிவந்ததற்காக நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். மேலும், இப்பத்திரிகையின் பழைய கையொப்பக்காரர்களும் நேசர்களும் உபபலமாயிருந்து இத்தனைநாளாய் இப்பத்திரிகையை ஆதரித்துவந்ததற்காகவும், இப்பத்திரிகை அவரவர் குடும்பங்களில் பெண்டீர் சிறுவர் சிறுமியர்கள் படித்துக் களிக்கவும் பாடசாலை மாணுக்கருக்கும் மற்றத் தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்கும் வெகுமதியாகக்கொடுக்கவும் உபயோகப்பட்டு வருவதற்காகவும் நாம் மிகவும் நன்றி பாராட்டுகிறோம். மற்றச் சுதேசபாஷாபத்திராதிபர்கள் நமது பத்திரிகையின் நேர்மையை அங்கீகரித்துத் தாமும் இதைப்போல் நடத்துவதுமல்லாமல் இப்பத்திரிகையில் காணப்படும் உபந்நியாசங்களையும் கதைகளையும் தெரிந்தெடுத்துத் தத்தம் பத்திரிகைகளில், சில வேளையில் பேர்கூறுவிடினும், பிரசுரம்செய்வது உசிதமென்று பதிப்பித்துவருகிறார்கள். அன்றியும் இவ்விடத்துத் தமிழ்நாட்டாரும் இந்த ராஜதானிக்கு வெளிப்பட்ட தேசங்களில் உள்ளவர்களும் இப்பத்திரிகை சீரோங்கி வளரவேண்டுமென்று அவரவர் கொண்ட நற்கருத்துகளைத்தெரிவிக்கத் தயைகூர்ந்து பல கடிதங்கள்

எழுதியனுப்பிவருகிறார்கள். இக்கருத்துகளை நாம் நன்குமதிப்பதுமல்லாமல் இவைகளால், தூண்டப்பட்டு இப்பத்திரிகையை ஜனங்களுக்கு மேன்மேலும் விநோதகரமாக்கி இன்னும் விசேஷமாய்ப் பரவச்செய்ய ஊக்கமுடையவர்களாகிறோம்.

இப்பொழுது ஆரம்பிக்கும் 1879-ஆம் வருஷத்துச் சஞ்சிகைகள் இதுவரையில் நாம் கொண்ட கோட்பாடுகளை அனுசரித்தே நடத்தப்படும். மேலும் இத்தனைநாளாய் இருந்ததுபோல நீதிவிஷயங்களும் சாஸ்திரவிஷயங்களும் சிறுவர்கள் விரும்பத்தக்க பல விநோத கதைகளும் விசித்திரமான படங்களும் இருப்பதோடுகூட, இவ்வருஷத்துப் புத்தகத்தில் சுதேசசரித்திரவிலாசம் என்னும் சிற்சில விநோதமான பூர்வ கதைகளும் எழுதலாகும். இத்தன்மையான கதையொன்று நாளதுமாதச் சஞ்சிகையிலேயே ஆரம்பித்திருக்கிறது. இவைகளோடுகூட மாட்சிமைபெற்றவர்கள் புண்ணியபுருஷர்கள் முதலானோர்களுடைய சரித்திர சங்கிரகமும், கால்நடை முதலான ஜடஜந்துக்களை இம்சிக்காமல் ஆதரித்துவருவது நற்குணமெனக்காட்டும் விஷயங்களும், நன்னெறிகளைப்பற்றிய பல உபந்நியாசங்களும், இன்னும் இவ்வாறு சிறியோர் பெரியோர் பலர்க்கும் உபயோகமான விஷயங்களும் சேர்க்கப்படும்.

இதைவிட விசேஷமாய்ச் சொல்ல இங்கிடமில்லை; நாம் இப்பத்திரிகையைத் தொடங்கும்போது இருந்ததுபோலவே இப்போதும் இதன் அபிவிருத்தியைப்பற்றி விடாமுயற்சிசெய்வோம். இந்த ஜநவிநோதிநியைப் படிப்பவர் எல்லோரும் தம் பந்துமித்திரர் முதலியவர்களுக்கெல்லாம் இதைத் தெரியக்காட்டி, இதன் கையொப்பத்தொகையை மேன்மேலும் அதிகரிக்கச்செய்து, இதைப் பிரசுரப்படுத்துவதற்காகச் சென்னைச் சுபாஷாபுத்தகச்சங்கத்தாருக்கு யாதொரு வருத்தமும் கொடாமல் மிகவும் நயமான இந்த ஜநவிநோதிநி தன்னைத்தானே தாங்கிக்கொள்ளும்படியாகச்செய்து, தமிழ் நாட்டில் மேன்மேலும் நல்லறிவு பரவவும் அனைவர்க்கும் புத்தக வாசிப்பதில் ஒரு விருப்பம் உண்டாகவும் வேண்டுமென்று மேற்படிச் சங்கத்தார்கொண்ட மேலான எண்ணம் கைகூடும்படித் தம்மால் கூடியவளவு முயற்சிசெய்ய வேண்டுகிறோம்.

தக்காணத்துப்பூர்வகதை.

ஏற்றத்தாழ்ச்சி அத்தவண அதிகமில்லை.

ஒருதேசத்தில் ஒரு சிற்றரசன் ஒருநாள் தன் மந்திரியைப்பார்த்து, இதென்ன என்னை அடிக்கடி குளிரும் காய்ச்சலுமாய் நோய் வந்துவருத்துகிறதே; நான் உடம்பை வெகு ஜாக்கிரதையாயே பாதுகாத்துவருகிறேன்; பனியிலாகட்டும் மழையிலாகட்டும் காற்றிலாகட்டும் நான் ஒருபோதும் சஞ்சரிப்பதில்லை; எப்போதும் உஷ்ணமான போர்வைகளையே போர்த்துக்கொண்டிருக்கிறேன்; ஆகாரமோ, நல்ல ஆகாரங்களையே புசித்துவருகிறேன்; எவ்வளவு ஜாக்கிரதையாய் நான் உடலைப் பாதுகாத்துவந்தும் குளிரோ காய்ச்சலோ ஈளையோ இருமலோ ஏதாவது ஒன்று ஓயாமல் தொந்தரை செய்துகொண்டேயிருக்கிறதே; இதென்ன துர்ப்பாக்கியமென்று கேட்டான். அதற்கு மந்திரி, மகாப்பிரபுவே! ‘அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம்’ என்கிறபடி எந்தச் செய்கையையும் நாம் அளவுக்கு அதிகமாய்ச் செய்வதனால் நமக்குத் தீமையேயொழிய நன்மையொன்றுமில்லை. ஒரு செய்கையை நாம் அளவு கடந்து செய்வதைவிடச் செய்யாமலிருப்பதே நலம்; வேண்டுமானால் இதற்குத் திருஷ்டாந்தமும் சீக்கிரத்திலேயே காட்டுகிறேன் என்றான்.

அப்படியே ஒருநாள் மந்திரி தன் சொல்லை அரசனுக்கு உண்மைப்படுத்திக் காட்டுவதற்காக அவனை அழைத்துக்கொண்டு விநோதமாய்ப் போய்வரும்படி புலங்களுக்குச் சென்றான். கொஞ்சம்தூரம்போகையில் வழியிலே ஆட்டிடையன் ஒருவன் இருந்தான். அந்த இடையன் எப்போதும் ஆடுகளை மேய்த்துக்கொண்டு காடுகளிலேயே சுற்றிக்கொண்டிருப்பவன்; மேலே போர்வைக்கு ஒரு கந்தற்கம்பளிதவிர வேறொன்றும் கிடையாது. மழைபெய்தாலும் வெயில் எரித்தாலும் பனிபெய்தாலும் மேலுக்கு அந்தக் கம்பளிதான்; வயிற்றுக்கு நல்லசோறு கிடையாது. களியோ கிழங்கோ அகப்பட்டதைத் தின்றுகொண்டு கண்டதண்ணீரையும் குடித்துக்கொண்டு புலங்களிலேயே கருக்கோலைக் குடிசையிலே வசித்துக்கொண்டிருந்தான். அவனைக்கண்டு மந்திரி ராஜாவைப்பார்த்து, இந்த எளியமனிதன் பிழைக்கிறபிழைப்பு இத்

தன்மையதென்று தங்களுக்கு நன்ருய்த் தெரியுமே; இவன் இப்படி வெயிலிலும் காற்றிலும் அடிபடுவதனுல் இவனுக்குச் சரீரத்தில் ஏதாவது அசவுக்கியமுண்டோவென்று இவனையே கேட்டுப்பார்க்கலாம் என்ருன்.

மந்திரி சொன்னபடியே ராஜா இடையனைக் கண்டு, அப்பா! நீ இப்படி வெளியிலே திரிவதனுல் உனக்கு உடம்பில் காய்ச்சல் குளிர்முதலிய தொந்தரையொன்றும் உண்டாவதில்லையா என்று கேட்க, அவன், பிரபுக்களே! தங்கள் தயவினுல் எனக்கு அப்படிப்பட்டது ஒன்றும் கிடையாது; பிறந்தநாள்முதல் நான் இப்படியேதான் வெளிப்புறங்களில் திரிந்துகொண்டிருக்கிறேன்; வெயிலும் காற்றும் எனக்கு யாதொரு தீமையும் செய்வதில்லை; அந்தந்தக்காலத்திற்கு அதது இயற்கையாகவே இருக்கிறது என்று சொன்னுன்.

அதைக்கேட்டு ராஜா மந்திரியைப்பார்த்து, அப்பா! இது வெகு ஆச்சரியமாயிருக்கிறது! இந்த இடையன் அதிக பலசாலியாயிருக்கவேண்டும்! இவனுக்கு ஒன்றும் ஒரு தீங்கும் செய்வதில்லையே; இதென்ன அதிசயம் என்றுசொல்ல, அதையும் கண்டறிந்துபார்ப்போமென்றுசொல்லி மந்திரி அந்த இடையனைக்கூடவே அரசனுடைய மாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோனுன். அங்கே அந்த இடையனைக் கொஞ்சகாலம் வெகு ஜாக்கிரதையாய் வைத்து ஆதரித்துவந்தார்கள். அவனை வீட்டைவிட்டு வெளியே சற்றும் நகரவொட்டுகிறதில்லை; காலைக்கூடத் தண்ணீரில் நனைக்கவொட்டுகிறதில்லை. இப்படியாக அவனுக்குப் பரமான்னம் முதலிய ராஜபோஜனமும் ராஜவஸ்திரங்களும் கொடுத்து ராஜபோகமாகவே சம்ரக்ஷணைசெய்துவந்தார்கள்.

சிலமாதங்களாகி இடையனுக்கு மிகவும் ஒடுக்கமான அறையில் வசிப்பதே நன்ருய்ப் பழக்கமாய்ப் போனபிறகு ஒருநாள் மந்திரி சலவைக்கல்லினுற்செய்த ஒரு மண்டபத்தில் தரையிலே கொஞ்சம் தண்ணீரைத் தெளிக்கச்செய்து அங்கே அந்த இடையனை வரவழைக்கக் கட்டளையிட்டான். அப்படியே ராஜாமுதலியவர்களெல்லாரும் வந்து கூடியிருக்க, இடையன் அந்த மண்டபத்திற்குவந்தான். அவன் நாலைந்து மாதகாலமாய்க் குளிர்ச்சியென்பதையே ஒருநாளும் அறியாதவனுதலால், அந்த இடத்தை மிதித்தவுடனே அவனுக்கு ஜலதோஷங்கண்டது. இத்தனைநாள் அவனிருந்த அந்தப்புறத்தைவிட அவ்விடம் கொஞ்சம் குளிர்ச்சியுள்ளதென்பதுதான் இதற்குக் காரணம். அன்றுமுதல் நாளுக்குநாள்

குளிரும் காய்ச்சலும் அதிகமாகி எவ்விதமான வைத்தியத்திற்கும் சாத்தியப்படாமல் கடைசியாய் அவன் இறந்துபோனான்.

அந்த ஈரத்தனையை மிதித்து அவன் உடம்பு நொந்துபோவான் என்று அரசன் கனவிலும் நினைக்கவில்லை. சிலநாள்கழித்து அரசன், நம்முடைய இடையன் எப்படியிருக்கிறான்; தண்ணீர் தெளித்ததரையை மிதித்ததனால் உடம்பில் என்னநோய் உண்டாகும் என்று மந்திரியைக் கேட்க, மந்திரி, ஐயோ! நான் என்னவென்றுசொல்வேன்; அது கடைசியில் நான் எதிர்பார்த்திருந்ததைப்பார்க்கிலும் பொல்லாததாய் முடிந்தது. அந்த எளிய இடையன் உடனே ஜன்னிகண்டு இறந்துபோனான்; முன்னே அதிக சவுக்கியமாய் நடத்தப்பட்டிருக்க, திடீரென்று அந்த நிலைமை மாற்றவே உடனே அவன் இறந்துபோம்படியாயிற்று. இதனால், எப்படிப்பட்ட அபாயங்களெல்லாம் எளியவர்களைவிட்டுத் தனவான்களையே சேரக் காத்திருக்கின்றனவென்று தெரிந்ததல்லவா? இப்படித்தான் இவ்வுலகத்தில் ஏற்றத்தாழ்ச்சி அதிகமாயிராமல் ஒருவாறு மட்டந்தட்டி யாவரும் ஒரே அளவாயிருக்கக் கடவுள் வழியேற்படுத்தியிருக்கிறார். அளவற்ற செல்வமும் போகமும் தாம் இருக்குமளவும் விசேஷமாய் இன்பந்தருமாயினும், அடிக்கடி சரீரத்தில் அசவுக்கியமுண்டாக்கி வாழ்நாளையும் சுருக்கிவிடும். ஒன்றுமில்லாத எளியவர்களோ நல்ல தேகவலிமைபெற்று என்றும் ஒருசீராய் வாழ்வார்கள்.

ஆகாயம் நீலமாயிருப்பதேன்?

உலகத்திலுள்ளோர் அனைவரும் ஆகாயத்தில் மிகவும் பளபளப்பான மாசற்ற நீலநிறத்தைக் கண்டு வியந்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும் எவராகிலும் எப்பொழுதாவது சிறிதுநேரம் நிதானித்து இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசித்து ஆகாயம் நீலமாயிருப்பதேன் என்று சிந்தித்துப்பார்த்தது உண்டா? ஆய்ந்துபார்த்தால் இதற்குக் காரணம் மிகவும் சுலபமானதுதான். ஆயினும் அதைத் தெரிந்துகொள்ள முயல்வதற்குமுன்னே ஒளியின் இயற்கையைப்பற்றி நாம் கொஞ்சம் தெரிந்துகொள்வது மிகவும் அவசியமானது.

முதலில், உலகத்திலுள்ள ஒளிகளெல்லாம் முக்கியமாய்ச் சூரியனிடத்தினின்றுமே உண்டாகின்றனவென்று அனைவர்க்குந் தெரி

யும். அதன்மேல் அறிந்துகொள்ளவேண்டுவது என்னவெனில், சூரியனுக்கும் நமக்கும் நடுவிலிருக்கும் அநேகங் காதவழியைக் கடந்துகொண்டு அந்த ஒளி நம்மிடத்திற்கு எப்படிவருகிறதோ அதை அறியவேண்டும். மிகக் கற்றறிந்த பண்டிதராகிய நியூடன் சொல்வதாவது: சூரியன் ஏதோ ஒருவகைப்பொருளின் சிறு துண்டுகளை ஆகாயத்தின்வழியாய் நம்மிடத்திற்கு எறிகிறான்; அந்தப் பொருள் நம் மண்டைவந்து நமது கண்களுள் ஊடுருவிச் செல்லுகின்றது; அதனாலேதான் ஒளி உண்டாகிறதென்று சொல்லுகிறார். அது அவ்வளவு உண்மையாயிருக்குமென்று தோன்றவில்லை; ஏனெனில், இந்த ஒளி யொன்றுதவிர மற்றெந்தக் கெட்டிப்பொருளாவது கண்ணாடிக்குள் ஊடுருவிச்செல்லக் கண்டிருக்கிறோமா? மேலும் இந்த ஒளியே கண்ணாடியைவிட வெகு மெதுவாயும் ஊடுருவிச்செல்ல வெகு சுலபமாயுமிராநின்ற ஒரு கறுப்புத்துணியைக் கடந்து செல்லமாட்டாதென்பது நமக்கு நன்றாய்த்தெரியுமே. இந்த ஒளியின் விஷயத்தைப்பற்றியே ஆலோசனை செய்துகொண்டிருந்த அநேகர் இப்பொழுது, சூரியனுக்கும் நமக்கும் இருக்கிற இடைவெளியிலே வெகு லேசாய்க் கண்ணுக்குத்தெரியாத ஈதர் என்று சொல்லப்பட்ட ஒரு பொருள் வியாபித்திருக்கிறதென்றும், சமுத்திரத்தில் நீர் அலையலைத்துக்கொண்டு ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்கு ஓடுவதுபோல.(மெக்ஸிகோ குடாவிலிருந்து அயர்லாந்து முதலாய்ப் பலவிடங்களுக்குச் சமுத்திரத்துள் நீர்வெள்ள மோடுவது அநேகர்க்குத் தெரியுமல்லவா?) ஒளியும் அந்த ஈதரின்மூலமாய் நாற்புறமும் பரவுகிறதென்கிறார்கள். ஆயினும் நீரலைக்கும் ஒளியலைக்கும் சிறிது வேற்றுமையுண்டு. நீரலை ஒரு நிமிஷத்திற்குக் கால்மயில்தூரம் ஓடுகிறதென்றால், அதேகாலத்தில் ஒளி கோடிமயிலுக்கு அதிகமாகவே செல்லுகின்றது.

ஒரு தண்ணீர்ப்பாத்திரத்தில் கையைவைத்து முன்னும் பின்னும் அலட்டினால், சிறிது சிறிதாய்ப் பல அலையுண்டாகிப் பாத்திரத்தின் ஓரங்களில் மோதுமென்பது தெரியுமே. நமது கையைப்போலச் சூரியனையும் தண்ணீரைப்போல ஈதரையும் வைத்துக்கொண்டால், ஒளியின் அலைகள் நீரலைக்கு ஒப்பாகவும், நமது கண்கள் அந்த அலைமோதுகிற பாத்திரத்தின் விளிம்புக்கு ஒப்பாகவும் ஆகும். இப்படிச் சூரியன் அசைவதனால் பல சிற்றலைகளுண்டாகின்றன; அவை தாம் ஒளியலைகள். அவை ஈதரின் மூலமாய்ச் சூரியனிடத்தினின்றும் நாற்புறமும் பரவுகின்றன.

பெரும்புசல் அடித்துவிட்டபிறகு சமுத்திரத்தில் அலைகள் மலைமலையாய்ப் பெருத்து எழும்பிவரக் கண்டிருக்கிற நாம் வேளைக்குத் தக்கபடி ஒளியலைகள் பலவிதமாயிருக்கக்கண்டு அதிசயிக்க வேண்டுவதில்லை. பெருத்த நீரலைகள் கடற்கரையில் பலமாய் மோதுவதுபோலவே பெருத்த ஒளியலையும் அதிக வேகமாய் நமது கண்க

ளில்வந்து மோதி அந்த ஒளிக்கு இருப்பிடமானபொருளை அதிக பளபளப்பாய் விளங்கச்செய்கின்றது.

புசலுக்குப்பிறகு மோதுகிற பெருத்த அலையொன்று மாத்திரமேயன்றி, ஒளிக்காகக் கடற்கரையிற் காணவேண்டிய திருஷ்டாந்தம் வேறொன்றும் உண்டு. பலவித வேளைகளில் அலைகள் ஒன்றுக்கொன்று பலவிதமான தூரமுடையதாயிருக்கக் கண்டிருக்கிறோமல்லவா? அப்படியே சிறந்த பண்டிதர்கள் ஒளியின் அலைகளைப் பரிசோதித்ததில் அவற்றுள் சில அலைகள் மற்றவைகளைவிட ஒன்றுக்கொன்று இரட்டிப்பான தூரத்திலிருப்பதாகக் கண்டிருக்கிறார்கள். ஒளியைப்பற்றிய மிகவும் நுட்பமான விஷயம் இதுதான்; அந்தந்த ஒளியலைகளுக்கு நடுவில் இருக்கிற தூரத்தினாலேதான் ஒளிக்கு நிறம் ஏற்படுகிறது. ஆகையால் அந்ததூரத்தின் அளவைக் கண்டுகொண்டால் இன்னஒளி இன்னநிறமுடையதென்றும், இன்னஒளி இன்னநிறமென்று தெரிந்துகொண்டால் அதைக்கொண்டு இன்ன அலை இன்ன அலையைவிட இவ்வளவு தூரத்திலிருக்கிறதென்றும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ஒளியலைகள்வந்து நமது கண்களில் மோதும்போது, எல்லாவற்றிற்கும் கடைசியாய் வெகுதூரத்திலிருக்கிற அலைகள் சிவப்பு நிறமாகவும், அதை அடுத்தஅலைகள் கிச்சிலிப்பழ நிறமாகவும், அதன் பின்னலை மஞ்சள்நிறமாகவும், பிறகு பசுமைநிறமாகவும், அப்புறம் கறுப்பாகவும், பிறகு நீலமாகவும், கடைசியாய் ஊதாநிறமாகவும் தோன்றும். இப்படியாக ஒளியலைகள் நீர்அலைகளுக்கு ஒப்பாகவே இருக்கின்றன; நீரலையின் உயரத்திற்கு ஒளியலையின் பளபளப்பும் அதன் தூரத்திற்கு இதன் நிறமும் சரியாகின்றன.

இப்போது நிறமுள்ள ஒளி இப்படிப்பட்டதென்று தெரிந்தது. ஒளிக்கு வெளுப்பு நிறமாவது என்னவென்று இனி விசாரிக்கவேண்டும். ஒரு திருஷ்டாந்தம்பாருங்கள்: வட்டமான ஒரு உரப்புக்கடிதத்தையெடுத்து அதில் நேருக்குநேராகச் சமதூரத்தில் நான்கு கோடு இழுத்து மையத்தில் ஒரு ரந்திரம்செய்தால், அந்தத் துண்டுக்கடிதம் எட்டுப்பாகமாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வெட்டினுள் ஒன்றில் சிவப்புநிறமும், அதையடுத்த இரண்டில் மஞ்சள்நிறமும், அதையடுத்த கட்டத்தில் கிச்சிலிப்பழநிறமும், அதன்பக்கத்துக் கட்டத்தில் பசுமைநிறமும், ஆறாங்கட்டத்தில் கறுப்பும், ஏழாங் கட்டத்தில் நீலமும், எட்டாங்கட்டத்தில் ஊதாவுமாக நிறங்கொடுத்துப் பிறகு அந்தத் துண்டுக்கடிதத்தைக் காற்றாடிபோலக்கட்டி வெகு வேகமாய் ஆடச்செய்தால் அப்போது அந்தக் கடிதம் முழுதும் வெளுப்பாகவேதோன்றும். இதை அநேகர் நேராய்ப்பார்த்துமிருக்கலாம். அதிலுள்ள வர்ணங்களெல்லாம் சுத்தமான வர்ணங்களல்லவாகையால் அந்த வெண்மைநிறம் சுத்தமான வெளுப்பாயிராது; சாம்பல் நிறமாயிருக்கும். இந்தப் பலவர்ணங்களை

யும் சேர்ப்பதனுல் வெண்மைநிறமாகிறதென்று இதனுல் தெரிய வருகிறது. ஆனுல் வெண்மைநிறத்தில் இத்தனை வர்ணமும் கலந்திருக்கவேண்டுமல்லவா?

நியூடன் என்பவர்தான் முதல்முதல் இதைக் கண்டுபிடித்து விளக்கிக் காட்டியிருக்கிருர். வெளுப்புநிறமாகிய சூரியனுடைய காந்தி பிரிஸிம் என்று வழங்குகிற முச்சவுக்கக்கண்ணுடியின் வழியாய்ப் புகச்செய்தால் அதினின்றும் வெளிவருகிற காந்தி வெளுப்பாயிருப்பதில்லை. சிவப்பு மஞ்சள் பச்சை நீலம்முதலான நிறங்களாக மாறுகின்றன. அந்த ஒளி ஒரு கடிதத்தில் விழும்படிச் செய்தால் அதில் கீழ்ச்சொன்ன வரிசையாகவே சிவப்புமுதலிய நிறங்கள் அமையக் காணலாம். இந்தவரிசையும் கீழ்ச்சொல்லிய படி ஒளியலைகளுக்கு ஒன்றுக்கொன்றுள்ள தூரத்தின் வேறுபாட்டால்தான் உண்டானது. இந்தப் பலவர்ணங்களும் இப்படித் தோன்றுவதற்கு அந்த முச்சவுக்கக் கண்ணுடிசெய்கிற காரியமென்னவெனில், வெண்மைநிறமாக மாறுகிற பலநிறமுள்ள சூரிய கிரணங்களைத் தனித்தனி தன்னிடத்திற்கு இழுத்துக்கொள்கின்றது. ஆயினும் எல்லாக் கிரணங்களையும் ஓரளவாக இழுத்துக்கொள்வதில்லை. சிவப்புக்கிரணங்கள் மிகவும் பெரியவைகளாதலால் சுலபமாய் வணங்கிவரமாட்டா; மிகவும் சிறியவைகளான ஊதா கிர்ணங்களோ கொடிபோல் வெகு லேசாய் வணங்குகின்றன.

இவைகளுக்கும் ஆகாயத்திலுள்ள நீலநிறத்திற்கும் சம்பந்தமென்னவென்று இப்போது விசாரிப்போம். வெளுப்பான சூரிய காந்தி இப்பூமியைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலத்தில் வரும்போது, பிரிஸிம் என்னும் கண்ணுடிசெய்வதுபோலவே செய்ய வல்ல, ஏதோ ஒரு பொருளோடு சேர்கின்றது. அப்போது பலவிதமான சூரியகிரணங்களும் அதனுல் வணக்கியிழுக்கப்பட்டு வெவ்வேருகப் பிரிக்கப்படுகின்றன. கறுப்புநீலம் ஊதா இந்தக் கிரணங்கள் அதிகமாய் வணக்கப்பட்டு அவற்றுள் சில மறுபடியும் சூரியனிடத்திற்குத் திரும்பிச்செல்லும்படி செய்யப்படுகின்றன. மிகுந்த பச்சை மஞ்சள் சிவப்பு இந்த நிறங்கள்மாத்திரமே நம்மிடத்திற்கு வருகின்றன. இவையெல்லாம்சேர்ந்து மங்கலான மஞ்சள்நிறமாகின்றன. மூடுபனிமுதலியவைகளால் ஆகாயம் நன்ருய்க் கனத்திருக்கையில் இன்னும் பச்சை மஞ்சள் நிறங்கள்கூடச் சூரியனிடத்திற்குத் திருப்பப்பட்டுக் கிச்சிலிப்பழ நிறமும் சிவப்புநிறமுமே நம்மிடத்திற்கு வருகின்றன. அதனுலேதான் அக்காலத்தில் சூரியன் அதிக சிவப்பாகத் தோன்றுகின்றது. காலை மாலைகளிலுங்கூட இதேவிதமாகவே ஆகின்றது. அக்காலங்களில் சூரியகிரணங்கள் மிகவும் சாய்வாக வாயுமண்டலத்தில் நடுவே வெகுதூரம் வரவேண்டியிருக்கின்றதனுல், பனிமூடிய ஆகாயத்தின் வழியாய்க்

கொஞ்சந்தூரம் வருவதனுல் எக்காரியம் உண்டாகிறதோ அதேகாரியம் உண்டாகின்றது; அதாவது: சிவப்புக் கிரணங்கள்மாத்திரமே நம்மிடத்திற்குவந்து சூரியனைச் சிவப்பாய்க் காட்டுகின்றன்.

திரும்பிப்போன ஊதா நீலம் கறுப்பு இந்தக் கிரணங்கள் என்னவாயினவோ அதை இப்போது விசாரிக்கவேண்டும். அவை ஆகாயத்தில் நாற்புறமும் பரவுகின்றன. சந்திரனிடத்திற்கும் மற்றக் கிரகங்களிடத்திற்கும் போகிற காந்தியினின்றும் நீலகிரணங்களையெல்லாம் நம்முடைய வாயுமண்டலம் இழுத்துக்கொள்கின்றது. அதனுலேதான் ஆகாயம் நீலமாகவும் அந்தக்கிரகங்களுடைய கிரணங்களெல்லாம் சிவப்பும் மஞ்சளுமாகவும் தோன்றுகின்றன.

இப்படிச் சூரியகிரணங்கள் சிவப்பும் நீலமுமாய் இரண்டாக நம்முடைய வாயுமண்டலத்தால் பிரிக்கப்படுகின்றன. சிவப்பு காந்தி நேராய் நம்முடைய கண்களண்டைவந்து சேருகின்றது. நீலநிறம் நாற்புறமும் பரவிப்போகின்றது. அதனுல் நாம் சிவப்புகாந்தியைமாத்திரம் பெற்றுக்கொண்டு நீலகாந்தியை இழந்துபோகிறும். ஆயினும் சந்திரனிடத்திற்கும் கிரகங்களிடத்திற்கும்போகிற காந்தியினின்றும் நீலநிறமானது நமது வாயுமண்டலத்தால் கவரப்பட்டு ஆகாயத்தில் நமக்கு நன்ருய்ப் புலப்படுகின்றது.

ஆகாயம் நீலமாயிருப்பது இதனுலென்பது இப்போது நன்ருய்த் தெரிந்ததல்லவா? இன்னும் சற்று நிதானித்துப்பார்த்தால் இன்னெருவிஷயமும் தெரியும். ஒவ்வொருகாலங்களில் சூரியன் அதிக சிவப்பாகத் தோன்றுகிறதே. அக்காலங்களில் பச்சைக்கிரணங்கள்கூட நம்மிடத்திற்கு வாாமல் திரும்பிப்போய் விடுவதனுலேதான் அப்படியாகின்றது. அதனுல் அக்காலங்களில் ஆகாயம் சுத்த நீலமாகத் தோன்றக்கூடாது. பசுமைகலந்த நீலமாகவே தோன்றவேண்டும். சூரியன் அதிக சிவப்பாய்த் தோன்றுகிற மாலைவேளைகளில் பார்த்தால் ஆகாயம் அப்படியே தோன்றக்காணலாம்.

சுதேசசரித்திர விலாசம்.

ராஜ்யம்விட்டோடிப்போன ஒரு மொகலாயராஜன் கதை.

மிகவும் எளியவனுன பள்ளன் ஒருவன் ஒருநாள் காலையில், ஆற்றேரத்தில் ஒரு காட்டிலே தனிப்புறமாயிருந்த தன் குடிசையில் உட்காந்துகொண்டிருந்தான். அப்பொழுது அவன் நிலை மிகவும் துக்ககரமாயிருந்தது. அந்த நாடெங்கும் அப்போது பஞ்சம் மிகக்கொடியதாய்க் குடிகளை மிகவும் வருத்திக்கொண்டிருந்தது. அவ்வூர்க்குடிகள் அநேகமாய் மாண்டுபோனுர்கள்.

நமக்கும் அந்தக்கதி எந்தநிமிஷத்தில் நேரிடுமோவென்று அவன் திகிற்பட்டுக்கொண்டிருந்தான். அவன் மனையாள் பட்டினியாய் உடல்வற்றி எழுந்திருக்கமாட்டாமல் தன் கைக்குழந்தை ஒன்றையும் மடியில் விட்டுக்கொண்டு ஒருமூலையில் கைகால்சோர்ந்து விழுந்திகிடந்தாள். சோறுவேண்டுமென்றால் அதற்காக ஏதாவது கொஞ்சம் பக்கத்துப் பட்டணத்துக்குப் போய்த்தான் வாங்கிவரவேண்டியதாயிருந்தது. அதற்கும் அவன்கையில் காசுகிடையாது. ஊரிலே ஈனஜாதியானுக்குச் சோறிடுவாரொருவருமில்லை. அதனால் அவன் அப்படியே இறந்துபோகிறதென்று தீர்மானித்தான். அநேகநாளாய் அருமையாக ஏதோ சில காய்கிழங்குதவிர மற்றொன்றும் அவன் புசித்ததில்லை. அந்தக் கிழங்கும் அபூர்வமாய் எங்கேயோ ஓரிடத்தில் ஆற்றங்கரையில் கிடைத்ததேயன்றி மற்றெங்குமில்லை. அன்று காலையெல்லாம் அவன் மாட்டுமந்தையின் பின்னேபோய் அதன் சாணியில் ஏதாவது கொஞ்சம் கொள்ளு கலந்திருக்குமோவென்று அவற்றின் சாணியையெல்லாம் கும்பலாய்ச்சேர்த்து ஆய்ந்துபார்த்தான். ஒரு கை கொள்ளு அகப்பட்டது. அதைச் சமைத்துத் தன் பெண்சாதிக்குக் கொடுத்தான். அவன் தன் வாயில் தண்ணீர்விட்டு மூன்றுநாளாயிற்று. அவன் பெண்சாதிக்கோ இன்னும் பதினாறு வயதாகவில்லை. ஆயினும் அவளுக்குக் குழந்தைகள் மூன்று. அந்தக் குழந்தைகளிடத்திலும் அந்தப் பெண்ணினிடத்திலும் அவன் தன் உயிரினும் அதிக அன்புவைத்திருந்தான். எல்லாரும் ஒருமிக்க மாண்டுபோம்படியான காலம்வரவே அவன் கொண்டிருந்த அவ்வளவு ஆசையும் அவ்வளவு துக்கமாய் முடிந்தது.

அவன் தன்னுடைய கஷ்டகாலத்தை நினைத்து மனவருத்தப்பட்டுக்கொண்டே கம்பீரமாய் மெதுவாகப் பெருகிவருகிற ஆற்றுவெள்ளத்தைப் பார்த்துக்கொண்டு தன் குடிசைவாயிலண்டை உட்காந்திருந்தான். அப்போது அவன்மனதில் ஒரு தோற்றமுண்டாயிற்று. இவ்வுலகத்தில் யாவரும் விரும்பி மெச்சும்படியாக வாழ்கின்ற வாழ்க்கையல்லவோ நல்வாழ்க்கை! நல்லாரோடு கூடி வாழ்வதற்கு உதவாத பள்ளனுடைய கேடுகெட்டவாழ்வு என்னவாழ்வு? பரிசுத்தமான புருஷர்களண்டை ஒரு பள்ளன் போனால் அவனைத் தடியெடுத்துப் புடையார்களா? இப்படி நல்லாரோடு கூடிவாழாத மனிதனுக்கு நற்கதிதானேது? பள்ளனுடைய துக்கப்பிழைப்பு என்ன பிழைப்பு? இவ்வளவோடுகூட நமக்கு இப்போது பஞ்சத்தால் பெருந்துயரமும் நேரிட்டிருக்கிறதே! இப்போது இந்தக் குழந்தைகளுடைய பரிதாபத்தைத் தீர்க்கும்படியான பாக்கியமாவது பெற்றோமானால் நம்முடைய மனதுக்காவது கொஞ்சம் சவுக்கியமுண்டாகும்; அதுவுமில்லையே என்றிப்படிப் பலவிதமாக அவன் தன் குடிசைவாயிலில் உட்

காந்து அவ் வாற்று வெள்ளத்தை பார்த்துக்கொண்டே சிந்தித்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்தான்.

அவ்விடத்தில் அந்த ஆறு அதிக ஆழமும் அகலமும் உள்ளது. அந்த நதி கரைபுரண்டு மேல்வெள்ளம் வந்துகொண்டிருந்த அத்தருணத்தில் அக்கரையிலிருந்து ஒருவன் அவ்வாற்றை நோக்கி வெகுவேகமாய்க் குதிரைமேலேறிச் சவாரிசெய்துகொண்டுவந்தான். அவனைக் கண்டு அந்தப் பள்ளன் சற்றே மனச்சிந்தையைவிட்டு அண்ணாந்துபார்த்தான். எதிரே ஆற்றுவெள்ளம் வெகுவேகமாய் ஓடுகிறதென்பதுகூடத் தெரியாமல் அந்தமனிதன் ஆவேசங்கொண்டவன்போல் ஓடிவருகிறான். அவன் எந்தநிமிஷத்தில் நிற்பானோவென்று பள்ளன் எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான். அவன் நிற்கவேயில்லை; பித்தம்பிடித்தவன்போல் வெகுவேகமாய்ச் சவாரிசெய்துகொண்டுவந்து சரேலென்று ஆற்றிலிறங்கிவிட்டான். அவ்வாற்று வெள்ளம் அதிக பயங்கரமாய் இரைந்துகொண்டுவராவிட்டாலும் வேகம்மாத்திரம் மிகவும் அதிகமாயிருந்ததனால் அவன் இறங்கினவுடனே அந்த வெள்ளம் அவனையும் தன் வழியிலேயே கொண்டுபோக ஆரம்பித்தது. குதிரைமேல் அந்த மனிதன்மாத்திரமேயன்றிப் பெருத்த மூட்டையொன்றும் ஏற்றியிருந்ததனால், அது அந்தச் சுமையைத் தாங்கமாட்டாமல் முழுகி முழுகிக் கிளம்புவதாயிருந்தது. குதிரைமேலிருந்த மனிதன் அந்த அபாயத்தைக்கண்டு தான் தனியே நீந்தி அக்கரைசேரலாமென்று குதிரையிலிருந்து இறங்கிவிட்டான். மேல் உடுப்புகளும் அதிக சுமையாயிருந்ததனால் அவைகளைத் தூக்கிக்கொண்டு அவ்வாற்றின் குறுக்கே எதிர்த்துச் செல்ல அவனால் ஆகவில்லை. வெள்ளத்தின் வேகத்திற்கு அவன் வேகமெவ்வளவு? வெள்ளம் அவனைத் தன் வழியே கொண்டுபோகப்பார்த்தது.

தன்மேலிருந்த சுமைகழியவே குதிரை சுலபமாய்த் தண்ணீர்க்குமேல் தலையைத்தூக்கிக்கொண்டு மெதுவாய் நீந்தி அக்கரை போய்ச் சேர்ந்தது. அந்த மனிதன்மட்டும் பெரிய அபாயத்தில் அகப்பட்டுக்கொண்டான். அவன் நீர்மட்டத்திற்குமேல் தலையெடுக்கக்கூடவில்லை. அதைக் கடந்துபோக அவன் என்ன முயற்சிசெய்தும் ஒன்றும் பயன்படவில்லை. இனி அந்த முயற்சி கூடச் செய்யச் சக்தியில்லாமல் அவனுடைய கைகால்களெல்லாம் ஓய்ந்துபோய்விட்டன. அவன் வயிற்றில் தண்ணீர் நிரம்பிப்போயிற்று; கண்கள் இருண்டுபோயின; மதிமயங்கிப்போயிற்று. கடைசியாய்ப் பெருமூச்சுவாங்கிக் கண்களை மெரள மெரள விழித்தான். ஆற்று வெள்ளம் அவனைத் தலைகீழாய்க் கவிழ்த்து அடித்துக்கொண்டு போயிற்று.

இப்படி அந்த மனிதனுக்குநேர்ந்த அபாயத்தைக்கண்டு தன் குடிசைவாயிலில் உட்காந்திருந்த பள்ளன் சரேலென்று எழுந்து

தன் தேஹத்திலிருந்த ஆயாசத்தைக்கூடப்பாராமல் வேகமாயோடி அந்த மனிதன் அல்லாடுகிற விடத்திற்கு நேராய் ஆற்றிலிழிந்து வெகு வருத்தப்பட்டு நீந்திப்போய் அவனை மெதுவாய்ப் பிடித்திழுத்துக் கரைகொண்டுசேர்த்தான். கரையிலேகொண்டுபோட்டும் சிறிது நேரம்வரையில் அவனுக்குப் பிரஞ்ஞை வரவேயில்லை. அதுகண்டு பள்ளன் அவன் உடம்பை நன்றாய்த் துடைத்துத் தரையிலேபுரட்டி அவன் வயிற்றிலிருந்த நீரையெல்லாம் வெளியேகொண்டுதள்ளிப் பல உபசாரஞ்செய்தபிறகு கொஞ்சம் நினைவுவந்தது. உடனே அவன் கண்ணைத்திறந்தான். அத்தருணத்தில் தன் அண்டையிலிருந்து தன்னைப் பிழைப்பித்துக் கொண்டிருந்த மகோபகாரியான பள்ளனைப் பார்த்து நீர் சுகமாக வாழ்கவென்று வாழ்த்தினான்.

அதைப்பார்த்து அந்த பள்ளன், இதென்ன இது? தன்னை அயலார்தொடுவதே பெருந்தோஷமாக நினைக்கிற மகம்மதியர், யாரோ ஒரு பேதையான என்னை இப்படிக்குளிர்ந்து கடாக்ஷிப்பது என்ன அதிசயம்! ஒருவரையும் தொடுவதற்கு யோக்கியனல்லாத பள்ளன் உங்களைக் காப்பாற்றினவன்; எப்படியாவது நம்மால் ஒருவன் பிழைத்தானேயென்பதுதான் எனக்குச்சந்தோஷம். நாம் அன்னியஜாதியானாலும் நம்மை அன்பாய்ப் பார்க்கத்தக்கவர் உலகத்தில் யாராவது ஒருவர் இருப்பார் என்று ஒருவாறு மனத்திருப்தி கொண்டிருக்கிறேன் என்றான்.

அதைக்கேட்டு அந்தப் புதுமனிதன் என் உயிரைக்காத்தவர் நீரென்று எனக்குத் தெரியும். ஜாதியைப்பற்றின தாழ்வு எவ்வளவிருந்தாலும் உம்மிடத்தில் மதிப்புண்டாவதற்கு எனக்கு இவ்வளவேபோதும். பூததயை பச்சாத்தாபமுதலிய நற்குணமில்லாத அந்தஸ்து இருந்தாவதென்ன? உமக்குச் சம்மதமாயிருந்தால் உம்முடைய குடிசையில்வந்து சற்றே தங்கியிருக்கவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை என்றான்.

அதற்கு அந்தப் பள்ளன், ஐயா! வெகுநாளாய்ப் பட்டினிகிடப்பவனுடைய குடிசைக்கு வருவதனால் உமக்கு என்னசவுக்கியம் கிடைக்கப்போகிறது? நான் நாலுநாளாய்ப் பட்டினி; என் தலைவிதி எப்படியாகுமோ தெரியாது. அதோ தெரிகிறதே, அந்தக் குடிசையில் என் பெண்சாதி மூன்று குழந்தைகளோடு வயிற்றுக்குச் சோறில்லாமல் சாகக்கிடக்கிறாள். இப்படிப்பட்ட வீட்டைவிட உமக்குத் தங்க நல்லவீடாய் ஒன்று அகப்பட்டால் எனக்கு மிகவும் சந்தோஷம் என்றுசொன்னான்.

அவனுடைய நிலையைக்கேட்டு அந்தப் பிரயாணி மிகவும் பரிதாபப்பட்டு, என்னைக் காப்பாற்றின உமக்கு ஒரு குறையுமில்லை. நான் கூடியவரையில் உங்களுக்கு உதவிசெய்யக் கருதுகிறேன். என் குதிரை ஒரு அபாயமும் இல்லாமல் கரை

வந்து சேர்ந்திருக்கிறது. அதன்மேல் மூட்டையில் வேண்டிய உணவு வைத்திருக்கிறேன்; உங்கள் வீட்டுக்குப்போவோம் வாரும் என்றான்.

அதைக்கேட்கவே பள்ளன்முகத்தில் கொஞ்சம் ஒளி உண்டாயிற்று. உடனே அவன் தன் விரலினால் தரையைத்தொட்டுத் தலையில்வைத்து வந்தனஞ்செய்து மொணமொணவென்று அவனை வாழ்த்திக்கொண்டே தன் சிறுகுடிசைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

அந்தக் குடிசையில் நுழைந்தவுடனே செத்தவள்போலவே இட்டகால் இட்டகைகளாய்த் தரையில் விழுந்துகிடந்த பள்ளனுடைய பெண்சாதியை முதல்முதல் கண்டு அந்தப் புதுமனிதன் திடுக்கிட்டான். அவள்பக்கத்தில் இரண்டு மூன்று வயதுள்ள இரண்டு குழந்தைகள் படுத்துக்கொண்டிருந்தன. கைக்குழந்தையொன்று அவள்மேல்விழுந்து பாலற்று வறண்டுகிடக்கிற மார்பை வீணாய்ப் பிடிங்கிக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட துக்கஸ்திதியைப் பார்த்து அந்தப் புதுமனிதன் பட்ட சங்கடத்தைக்கண்டு அந்த வீட்டுக்காரனுக்கும் கண்ணீர்பெருகத்தலைப்பட்டது.

முன்னமே ஆற்றில் நீந்திவந்து கரைசேர்ந்த குதிரையானது தன் இயற்கையறிவினால் அறிந்துகொண்டதுபோல அந்தப் பள்ளன் குடிசைவாயில் சேர்ந்து இவர்கள் போனபோது அங்கேயே நின்றுகொண்டிருந்தது. அதன் முதுகிலிருந்த ஒரு பையை அவிழ்க்கையில் அதில் சில்லென்று ஈரமான கொஞ்சம் உணவும் தண்ணீரில் நனைந்துபோன அரிசியும் அதற்குவேண்டிய சிறிது சம்பாரமும் பார்ஷியாதேசத்துச் சாராயம் சில புட்டிகளும் இருந்தன. அரிசியையெல்லாம் எடுத்து வெயிலிலே காயப்போட்டார்கள். இதற்குள் அந்தச் சாராயத்தில் கொஞ்சம் குழந்தைகளுக்கும் அந்தப் பெண்பிள்ளைக்கும் கொடுத்து அவர்களுக்குச் சற்றே சத்துவம் உண்டாகச்செய்து பின்பு கொஞ்சம் உணவும்கொடுத்து அவர்களை ஆதரித்துவிட்டு, அந்த வீட்டுக்காரன் தானும் கொஞ்சம் புசித்து தன் பசியையும் தணித்துக்கொண்டான். இப்படித் தருணத்தில் நல்லஉதவி கிடைக்கவே அவர்கள் இரண்டொருநாளில் முன்போலவே சுகமாய் எழுந்தார்கள்.

அந்தப் புதுமனிதன் ஆற்றுவெள்ளத்தில் தப்பிப் பிழைத்து வந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் அவ்வாற்றுக்கு அக்கரையிலே அநேகம் குதிரைவீரர்கள் வந்துசேர்ந்தார்கள்; ஆயினும் அந்த நதி அங்கே வெகு விசாலமானதென்றும் இறங்கிப்போக ஒருவர்க்கும் நிலைக்காதென்றும் கண்டு திரும்பிப்போய்விட்டார்கள். அன்று ராத்திரி அந்தப் புதுமனிதன் தன் தேஹத்தில் ஏதோ வேதனைசெய்கிறதென்றுசொல்லி வருத்தப்பட்டான். அவனுக்குத் தூக்கமே வரவில்லை; நாவறட்சியும் சீதளமும் அதிகரிக்கலாயிற்று.

அவன் தான் வழக்கமாய்க் கட்டிக்கொள்கிற சால்வையை மேலே போர்த்துக்கொண்டு அந்தக் குடிசையில் ஒரு மூலையிலே உலர்ந்த புல்லைக் கீழேபோட்டுக்கொண்டு படுத்திருந்தான். பொழுது விடிவதற்குள் அவனுக்குக் குளிரும் காய்ச்சலும் அதிகமாய் வந்துவிட்டது. அப்புறமும் அது நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டேவந்து கடைசியில் ஜன்னிகூடக் காணும்படியாயிற்று. அவன் தேஹத்தில் காய்ச்சல் அதிகமாக ஆக இத்தனைநாளாய்ப் பட்டினிகிடந்து வருந்தின அவ்வீட்டுக்காரர்களுக்கு நல்லுணவி னால் தேகசவுக்கியமுண்டாயிற்று.

அந்தப் பிரயாணியினுடைய பையிலிருந்த பல பொருள்க ளோடுகூட ஆறுயிரம் ரூபாய் பொன் நாணயமாக இருந்தது. அவன் கொண்டுவந்த சாமான்களெல்லாம் செலவழிந்துபோகவே அந்த வீட்டுக்காரன் தன் சமுசாரத்துக்கும் அந்த நோயாளிக் கும் சம்ரக்ஷணைக்கு வேண்டிய திரவியம் அந்தப் பையினின்றும் எடுத்துக்கொண்டு அடுத்த பட்டணத்திற்போய் வேண்டிய பொருள் வாங்கிவந்தான். செலவுக்குவேண்டிய அளவுக்குமேல் ஒரு காசுகூட அவன் அந்தப் பையினின்றும் எடுக்கவில்லை. அவ்வீட்டுக்காரனுக்கு இயற்கையாயே ஜீவகாருணியமுண்டு; அத்தோடுகூடத் தன் சமுசாரமெல்லாம் அநியாயமாய்ப் பட்டி னியால் மாண்டுபோகாமல் தருணத்தில் காப்பாற்றின மகோபகாரி யென்கிற நன்றியும் கூடியிருந்ததனால், அவன் தன்னால் வஞ்சனை யில்லாமல் எப்போதும் அந்த நோயாளியண்டையே யிருந்து காத்து அவனுக்குப் பலவித உபசாரங்களும் செய்தான். அதற் கெல்லாம் அவன் மனைவியும் துணையாயிருந்தாள். அவன் உயி ருக்கு எங்கே அபாயம் வருகிறதோவென்று பயந்து அவர்கள் இராப்பகலாய்க் கண்விழித்து அவனுக்கு வேண்டிய வைத்தியஞ் செய்தார்கள். கடவுளுடைய கடாக்ஷத்தால் அவனுக்கு தேகம் அனுகூலப்படுகிற காலம்வந்து கொஞ்சங் கொஞ்சமாய்க் காய்ச்சல் வாங்கிச் சுகமாய் நாளளவிலே நோயெல்லாம் நீங்கிற்று. தனக் காக அவர்கள் பட்ட வருத்தத்தைப்பார்த்து அவன் அவர்களுக்கு அநேகவந்தனஞ் செய்தான். பின்பு பள்ளன் அவனுடைய பணப்பையை அவனெதிரேகொண்டு வைத்துத் தான் செலவுசெய்த ஒவ்வொருகாசுக்கும் சரியாய்க் கணக்கு ஒப்புவித்தான். அந்த விருந்தினனும் தன் தேகத்தில் நன்றாய் வலிமைவருமளவும் அவ் வெளியவர்களோடுகூடவே அங்கே வசித்துக்கொண்டிருந்தான்.

தன் தேகம் அனுகூலப்பட்டுக்கொண்டு வருகிறகாலத்தில் அவன் அவர்களுடைய குணங்களையெல்லாம் நன்றாய்க் கண்டு கொண்டான். சிலநாளையில் யாவர்க்கும் தேகம் சொஸ்தப்பட்டு இயற்கையான வலிமையுண்டாயிற்று. அவ்வீட்டுக்காரனுடைய மனைவி நல்ல வடிவழகும் நற்குண நற்செய்கையுமுள்ள ஒரு சிறு

பெண்; அவள் முகக்களையைப் பார்க்கும்போதே யாவரும் களிப்படையும்படி அவள் அவ்வளவு அழகாயிருந்தாள். அவள் கணவனும் நல்ல சுறுசுறுப்பும் உற்சாகமும் தேகவலிமையும் உள்ள ஒரு வாலிபனுயிருந்தான். அவர்களுடைய பெரியகுழந்தை ஒரு பெண்பிள்ளை; அப்பெண்ணுக்கு அப்போது மூன்றுவயதுகூட ஆகவில்லை. அந்தப் பெண் ஒரு தேவகன்னிகையைப்போல் அதிக ரூபவதியாயிருந்தாள். அந்தப் பெண்ணினுடைய ஒவ்வொரு அவயவமும் அததற்கேற்றபடி வெகு அற்புதமாய் அமைக்கப்பட்டிருந்தன. நமக்கல்லவோ இப்படிப்பட்ட சுந்தரமான பெண் பிறந்தாளென்று அகமகிழ்ந்தவர்போல் அவ்வீட்டுக்காரர்கள் மிக மனவெழுச்சிகொண்டிருந்தார்கள்.

அப்படியிருக்க ஒருநாள் அந்தப் புதுமனிதன், அவ்வீட்டுப் பள்ளனும் தானுமாய்க் குடிசைவாயிலில் உட்காந்திருந்த வேளையில் அவனைப்பார்த்து, எனக்குப் பேருதவிசெய்த புண்ணியவானே! நான் உங்களைவிட்டுப் போகவேண்டியகாலம் வந்துவிட்டது. உங்களுடைய சிறுகுடிசைதான் என்னைக் காப்பாற்றிற்று. ஒரு எளிய பள்ளன் வீட்டில் ஒருவன்போய்த் தங்கியிருப்பதாய் ஒருவரும் நினைக்கமாட்டார்கள்; அதனுலேதான் நான் ஒருவர்கையிலும் அகப்படாமல் தப்பிப்பிழைத்தேன். நான் படுக்கையோடு படுக்கையாய் வீழ்ந்துகிடந்தகாலத்தில் நீங்கள் எனக்கு மனமொப்பிச்செய்த உதவிகளுக்கு அளவில்லை. அதற்கு நான் பதில்உதவி என்னசெய்யமாட்டுவேன் என்றான்.

அதைக்கேட்டுப் பள்ளன், ஐயா! கூண்டோடு கைலாசம் போவதாயிருந்த என் சமுசாரத்தையெல்லாம் பிழைப்பூட்டுவித்த உமக்கு நான் செய்த உதவி எவ்வளவு? வீணுய் என்னை ஏன் பெருமைப்படுத்துகிறீர் என, அவன், அதிருக்கட்டும்; உம்மால் ஆற்றுவெள்ளத்தினின்றும் கரையேற்றுவிக்கப்பட்ட மனிதன் இன்னுனென்று உமக்குத் தெரியுமாவென்று கேட்டான்.

அதற்குப் பள்ளன், அதை நான் அறியவேண்டுவதில்லை; ஒரு மன்னுயிரைப் பிழைப்பித்தேனென்பதே எனக்குப் போதும்; நீர் யாராயிருந்தால் எனக்கென்ன? கடைசியாய் நீர் எனக்குப் பேருதவிசெய்தவர்; என் உயிரைமாத்திரமேயன்றி அதிலும் எனக்குப் பதினுயிரம்பங்கு பிரியமாயிருக்கின்ற என் குழந்தைகளின் உயிரையெல்லாம் காத்தீர். இது என் மனதைவிட்டு என்றைக்காவது நீங்குமா? இந்தக் கடனை நான் எப்படித் தீர்ப்பேனே தெரியாது என, அந்த மனிதன் சொன்னதாவது: அதிருக்கட்டும்; நாளைக் காலையில் நான் இவ்விடம்விட்டுப் போகவேண்டும்; உமாயூன் என்கிற மொகலாய சக்கரவர்த்தியின் உயிரைக் காத்தோமென்று தெரிந்தால் உங்களுக்கு இன்னும் அதிக திருப்தி உண்டாகுமல்லவா? யாரோ ஒருவன் என்மேற் பகைகொண்டு என்னை ராஜ்யத்தினின்றும்

துரத்திவிட்டான்; மறுபடி என் ராஜ்யம் எனக்குக் கிடைக்குமள வும் யாராவது பிறதேசத்தரசனண்டைதான் அடைக்கலம் புகுந் திருக்கவேண்டும் என்றான். அவன் மொகலாய மகாராஜாவென்று தெரியவே அந்தப் பள்ளனும் அவன் மனைவியும் சாஷ்டாங்க மாய் அவன் காலில் வீழ்ந்தார்கள்.

ராஜா அவர்களைப்பார்த்து நான் கொடுக்கிற பரிதானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள், எழுந்திருங்கள் என்றுசொல்லி அவர் களையெழுப்பி, இனிமேலர்வது நீங்கள் சவுக்கியமாய் வாழுங் கள் என்று தன் கையிலிருந்த விலையில்லாமாணிக்கமொன்று பதித்த கணையாழியையும் கழற்றி அவன் கையிலேபோட்டு, இரண்டா யிரம் ரூபாய் மோகராவுள்ள ஒரு பையையும் அவன் கையிற் கொடுத்தான். இதைவிடப் பாக்கியம் அவர்களுக்கு வேறென்ன! அவர்கள் அதை ஆனந்தக்கண்ணீர் பெருகப்பெருகப் பெற்றுக் கொண்டார்கள். தன் தேகம் நன்றாய்ச் சொஸ்தப்பட்டுத் தனக்கு இயற்கையான வலிமைவந்துவிடவே, மறுநாள் காலையில் உமா யூன் இனி நமது தலைவிதி எப்படியாகுமோவென்று நினைத்துக் கொண்டே அவ்விடம்விட்டுப்போயினான்.

(இன்னும் வரும்.)

நல்ல பிரதிக்கினைகள்.

புதுவருஷம் ஆரம்பிக்கும்போதெல்லாம் புதிதாய் ஏதாவது ஒரு நல்லகாரியஞ்செய்து முடிக்கவேண்டுமென்கிற நல்ல பிரதிக் கினை கொள்வது மிக்க நலமென்று பல சிறுவர்கள் நினைப்பதுண்டு. நாம் புதிய புத்தகம் படித்து நல்வழியில் நடக்கப்போகிறோமல்லவா என்று அவர்கள் சொல்வார்கள்.

ஆயினும் அப்படி ஒரு நல்லதீர்மானங்கொண்டால் அவ் வளவோடே தாங்கள் சகலகாரியத்தையும் சாதித்துவிட்டதாக அநேகர் எண்ணுகிறார்கள். முதலில் ஒரு பிரதிக்கினைசெய்துகொள் வது வேறு; பிறகு அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்றுவது வேறு. புதுப்புத்தகத்தைப் படித்து அதிலுள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல் அழகாய்ப் புத்தகத்தைக் கையில் எடுத்துவைத்துக் கொண்டிருப்பதில் ஏதாவது நன்மை உண்டோ? முதலில் நாம் ஒரு தீர்மானஞ்செய்து பின்பு அதை நிறைவேற்றாமல் விடுவதைவிடச் செய்யாமலிருப்பதே நலம். பின்பு அந்தப் பிரதிக்கினை நிறைவேறி னாலும் நிறைவேறாமற்போனாலும், முதலில் ஒரு நல்ல பிரதிக்கினை செய்துகொண்டே புதுவருஷம் ஆரம்பிக்கவேண்டுமென்று கரு துகிறவர்கள் அதனால் என்னபயன்பெறக் காத்திருக்கிறார்களோ?

தினந்தோறும் காலையில் மிகவும் சோம்பலாய் விடிந்து யாமம் வரையில் தூங்குகிற கெட்டவழக்கமுள்ள ஒருவன் புதுவருஷம் ஆரம்பித்தபோது தன் தந்தையைப்பார்த்து, ஐயா! நான் இந்த வருஷம்முதல் மிகவும் சுறுசுறுப்புடன் சிற்றஞ்சிறுகாலேயெழுந்து வேலைகளை நன்ருய் நடத்தத் தீர்மானித்திருக்கிறேன் என்று சொல்லி அவ்வளவோடு திருப்தியடைந்தான். அந்தப்படி ஒருநாளாவது நடத்தினுனு? இல்லை. மறுநாள் காலைமுதல் முன்னிலும் நாலு நாழிகை அதிகமாகவே தூங்க ஆரம்பித்தான்.

இப்படியெல்லாம் நேரிடுவதற்குக் காரணமென்னவெனில், நாம் இப்போது ஆரம்பிக்கிறகாரியம் செம்மையாய் முடியுமா முடியாதாவென்பதை நன்ருய்க் கருத்துடனே ஆலோசித்துப்பாராமல் திடீரென்று ஒரு பிரதிக்கினைசெய்வதனுல் இப்படியாயிருக்கின்றது; இக்காரியம் நம்மால் செய்து முடிக்கக்கூடும் என்று நம்முடைய மனதுக்குத் தைரியமாய்த் தோன்றினுலொழிய நாம் ஒன்றையும் தீர்மானிப்பது தகுதியன்று.

புதுவருஷத்தைத் தொடங்கவேண்டிய விதம் எப்படிப்பட்டது தெரியுமா? நாம் இவ்வளவு காலத்தையும் நல்லவழியில் செலுத்தாமலே வீணுய்க் கழித்துவிட்டோமே, நமது மனதோ மிகவும் கெட்டதாயிருக்கிறது; அதினுடைய கெட்ட எண்ணம் இன்னும் நம்மைக் கெட்டவழியிலேயே செலுத்தக் காத்திருக்கிறது; நாம் எச்சரிக்கையின்றிக் கொஞ்சம் ஏமாந்திருப்போமானுல் அது நம்மைப் படுகுழியிலே தள்ளிவிடும்; ஆதலால், கடவுள் நம்மை இவ்வுலகத்தில் பிறப்பித்தது, நாம் நற்காரியங்களைச்செய்து நாளுக்குநாள் நல்வழியில் விருத்தியடைந்து அவருடைய பொற்ருமரையடியைப் பெறுவதற்காகவேயென்பதை நினைத்து, அதற்கு வேண்டிய நற்செய்கைகளைச்செய்யத் தீர்மானித்து அதை அவ்வாறே நிறைவேற்ற வேண்டும்.

இவ்வளவு காரியமும் நம்முடைய முயற்சியாலேயேசெய்து முடியுமா? நாம் எக்காரியம் செய்ய ஆரம்பித்தாலும் நம்முடைய மதிக்குறைவால் அதற்குவேண்டிய மனவுறுதி தவறிப்போவதுமாத்திரமேயன்றி இன்னும் பல இடையூறுகளும் மத்தியில் சம்பவிக்குமாதலின், அவையொன்றும் இல்லாமல் நாம் செம்மையாய் விருத்தியடையும்பொருட்டுக் கடவுளை நாள்தோறும் தொழுது வணங்கி நம்முடைய நல்லெண்ணங்களும் நற்செய்கைகளும் மேன்மேலும் அதிகரிக்கும்படி அவரைப் பிரார்த்திக்கக்கடவோம். இப்படிக் கடவுளைத் தொழுது மனவுறுதியோடு புதுவருஷத்தைத் துவக்குவோமானுல், நன்மைதீமைகளை நன்ருய்ப் பகுத்தறிந்து வாழ்நாளை நல்வழியாய்ப் போக்கிச் சவுக்கியம் அடைய வல்லவர்களாவோம்.

பருவம் எனக்குப் பதினேழானபொழுது!

மணஞ்செய்வதற்குமுன் தனக்கும் தன் நாயகனுக்கும் இருந்த நிலையை நினைத்து ஒருத்தி சொன்ன பாட்டின்பொழிப்புரை.

பருவம் எனக்கு ஆகப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்றில் பூலோக வாழ்விற்கு இருந்த வைபவம் ஆ! ஆ!! அன்றுள்ளபடி இன்றளவும் என் நினைவினின்று நீங்காதிருக்கின்றது!

இவ்வுலகு இப்பொழுதிலும் அப்பொழுது என் கண்ணுக்கு மிக இனிதாயிருந்தது. நாம் செய்துகொண்ட பிரமாணத்தைச் செவிகூர்ந்து கேட்ட வெய்ய மேல்காற்று எத்தனை மிருதுவாக வீசியது! கண்டுபேசக் குறித்திருந்த மரத்தின்கீழ் கன இருளில் காதோதி வாக்குத்தத்தஞ்செய்தோம். அம்மம்ம! அப்பொழுது பருவம் எனக்கு ஆகப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்று!

ஆற்றின் அலை மெல்லெனத் தத்திப்புரண்டு சலசலென்று ஒலித்த ஒலி மனதிற்கினிதென்று உவக்கும் கீர்த்தனை பாடியதுபோலிருந்தது; பழைய கல்வாரதியில் நின்று நாம் பார்த்தகண்ணுக்கு இவ்வையகமெல்லாம் யௌவனமாயிருந்தது. அங்கே நின்று ஒரு முத்தம் தந்து என் உள்ளம் கவர்ந்தீரே; ஆ ஆ! அப்பொழுது பருவம் எனக்கு மெத்தவல்ல பதினேழு; உமக்கு இருபத்துமூன்று!

தோன்றுதொட்டுள்ள பெருங்குன்றுகள் வெகு தொலையில் தெரிந்தன; வானத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன; இராமுப்பது நாழிகையும் சிறந்து இனிதாகி, ஆகாயம் அன்புகூர்ந்திருந்தது. பதினேழு வயசில் நானும் நீரும் இருந்த இருப்பை இருபத்து மூன்று வயசில் நீர் பரிவுகூர்ந்து நினைப்பதுண்டா? இதைக்குறித்து என் மனதிற் பலகால் விருப்புடன் வியப்புண்டாகின்றது.

நாம் இவ்வண்ணம் கொண்டாடிச் சுகித்து வெகுநாட் செல்லவில்லை; செல்லாதிருந்தும், நான் மனம்நொந்து வருந்தி அழுத கண்ணருவி பெருகி, நீர் உள்ளன்பு உருகி முத்திசெய்த முகம் நனைந்தது. முன் வாழ்வை முழுதும் மறந்திடுவேனாகில், ஆ! எத்தனை பாக்கியம்! எனது ஆசைக்கண்ணாளரே நீர் பத்தினி விரதம் தப்பியதேன்? பருவம் எனக்குப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்று கழிந்தபின் என் கண்ணுக்கு இவ்வுலகம் கோலம் மாறியது!

ஆற்றங்கரை நெடுக இராக்காற்று வீசும்பொழுது என் இருதயம் அம்மதுர வாக்குப்பிறந்த சுபமுகூர்த்தத்தை விரும்பி வருந்தி நினைக்கின்றது. வருந்தினும் அந்த நினைவு எனக்கு இனிதாயிருக்கின்றது. ஆ கெட்டேன்! அவ்வாழ்வு இனி ஏது! பின்னும் ஒருமுறை பருவம் எனக்குப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்று வருமோ!

சிறுவர்க்கான கதை.

பட்டணத்துச்குப் பாடப்போனவர்கள்.

ஒரு ஊரில் ஒரு மனிதன் கழுதையொன்று வைத்திருந்தான். அந்தக் கழுதை தன்னால் வஞ்சனையில்லாமல் அம்மனிதனுக்கு நெடுநாள் வேலைசெய்துவந்தது. வெகுகாலம் உழைக்கவே உடம்பிலிருந்த சத்துவமெல்லாம்போய் அக்கழுதை வேலைக்கு உதவாமற் போயிற்று. அதனால் அதனுடைய யஜமானன், இனி இந்தக் கழுதையால் யாதொரு உதவியுமில்லை; இதைக் கொன்றால் இதன் தோலினாலாவது ஏதாவது கொஞ்சம் லாபமுண்டாகுமோவென்று ஆலோசித்தான். அது தெரிந்து அந்தக் கழுதை இப்போது இங்கே நமக்கு நல்லகாலமில்லை; பட்டணத்திற்குப்போய் அங்கேதான் ஏதாவது பிழைப்பு தேடிக்கொள்ளவேண்டுமென்றெண்ணி அவ்வூரைவிட்டு ஓடிப்போயிற்று. போம்போது பட்டணத்துப் பாடகனாகவேண்டுமென்று எண்ணிக்கொண்டேபோயிற்று. சிறிதுதூரம்போகையில் வழியோரத்தில் மிகவும் உழைத்து ஓய்ந்துபோனதுபோல வாயைத் திறந்துகொண்டு வேட்டைநாயொன்று நின்றது; அதைக் கண்டு கழுதை அதனண்டைபோய், ஏன் நீ இப்படி வாயைத்திறந்து கொண்டு பாதையோரத்தில் நிற்கிறாயென்று கேட்டது.

அதற்கு அந்த நாய், ஐயா! நான் என் தலைவிதியை என்னென்று சொல்வேன்! இத்தனைநாள் செய்த வேலையினால் தேகவலிமையுங் குறைந்து தள்ளாதவயதும் வந்துவிடவே இன்னும் வேட்டைக்குப்போக என்னாலாகவில்லை. நான் உபயோகமற்றவனாய்ப் போனேனென்று தெரிந்து என் யஜமானன் என்னை உயிர் மாளப் புடைத்தான். அதனால் ஓடிவந்துவிட்டேன். இனி எவ்விதமாய் இரைதேடிப் பிழைப்பேனோ தெரியாதென்றது.

அதைக்கேட்டுக் கழுதை, நல்லது; நானொன்று சொல்லுகிறேன் கேட்கிறாயா? நான் பட்டணத்துப் பாடகனாகவேண்டுமென்று பட்டணத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். என்னோடு கூடவர உனக்கு விருப்பமுண்டா? அங்கே போய் நான் வீணையெடுத்து வாசிப்பேனானால் நீ கடவாத்தியம் வாசிக்கலாம் என்று சொல்ல, நாய் சந்தோஷமாய் அதற்குச் சம்மதிக்கவே, இரண்டுமாய்க் கூடிப் பட்டணத்துக்குப்போயின.

அவை அங்கிருந்து போகையில் சிறிதுதூரத்துக்கு அப்பால் நடுவழியில் பூனையொன்று தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அதைக்கண்டு கழுதை, ஓ கிழப்பூனையே! ஏன் இப்படி நீ தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்

கிறாய்? உனக்கு என்ன துன்பம் நேர்ந்ததென்று கேட்க, பூனை, ஐயா! கழுத்து முறிந்துபோனபிறகு எவனுக்குத்தான் உற்சாகமிருக்கும்? எனக்கு வயதாய்ப்போகவே என் பற்களெல்லாம் தளர்ந்து பலவீனமாய்ப்போயின. ஆதலால் எலிகளைத் துரத்திப் பிடிக்க எனக்குச் சக்தியில்லை. அடுப்பங்கரையில் குளிர்காய்ந்து கொண்டு உட்கார்ந்திருக்க என்னாலாகுமேயொழிய மற்றப்படி ஒரு காரியமும் செய்யமாளாது. அதனால் என் வீட்டுக்காரி என்னைப் புடைத்துத் தண்ணீரில் அமிழ்த்த யத்தனிக்கவே நான் ஓடிவந்துவிட்டேன். இனி நான் பிழைக்கவேண்டியவழி என்னவோ தெரியவில்லையென்றது.

அதைக்கேட்டு அவை, ஆனால் நீயும் எங்களோடுகூடப் பட்டணத்துக்கு வருவாயா? உனக்குத்தான் இராத்திரிகளில் பாட்டுப் பாட நன்றாய்த் தெரியுமே. நீயும் ஒரு பட்டணத்துப் பாடகனாகலாம்; எங்களுடன் வாவென்று அழைக்க, பூனையும் அதற்கு உடன்பட்டு அவைகளோடுகூடவே போயிற்று. இம்மூன்று நாடு சுற்றிகளும் அங்கிருந்து பட்டணம் நோக்கிச் சென்றன. சிறிது தூரத்தில் நடுவழியே ஒரு புலத்தில் கோழியொன்று தன் வலிமையெல்லாம் கொண்டு கூவிக்கொண்டிருந்தது. அதண்டைபோய், நீ இப்படித் தொண்டை கிழியும்படி விடியயாமம்முதல் கத்துகிறாயே; ஏனிப்படி வருத்தப்படுகிறாய் என்று கழுதைகேட்கக் கோழி, வருங்காலத்தின் குறி எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அதை யாவர்க்கும் தெரிவிப்பதற்காக நான் இப்படிக் கூவுவது வழக்கம். அதிருக்கட்டும்; இப்போது நாளை ஞாயிற்றுக்கிழமையாரோ புதிதாய் விருந்தினர் வருகிறாரென்று அதற்காக இவ்வீட்டுக்காரி என்னிடத்தில் சிறிதும் தயையில்லாமல் என்னையே கொன்று விருந்தளிக்கக் காத்திருக்கிறாள். இன்று சாயங்காலம் உயிர்போகப்போகிறதேயென்று துக்கித்துக் கத்துகிறேன் என்று சொல்லிற்று.

கழுதை அதைக்கேட்டு, ஆனால் நீயும் எங்களோடுகூடவே வந்துவிடு; நீ பார்வைக்கு வெகு அழகாயிருக்கிறாய்; எங்கே போனாலும் உனக்கு நல்ல பிழைப்பு கிடைக்கும்; மேலும் உன் குரல் வெகு மதுரமாயிருப்பதால் நாம் எல்லாரும்கூடிப் பாடினால் வெகு நன்றாயிருக்கும்; பட்டணத்துக்குப் பாடப்போகலாம் வாவென்று அழைக்க, அதுவும் அதற்கு உடன்படவே அவை நான்கும் ஒன்றாய்ச்சேர்ந்து புறப்பட்டுப்போயின. அவை நினைத்துப்போன பட்டணம் வெகு தூரத்திலிருந்ததனால் அன்றைய தினமே அவ்விடம் போய்ச் சேரக்கூடாமல் மாலைவேளையில் ஒரு காடுபோய்ச் சேர்ந்து அன்றிரவை அங்கேயே யொழிக்க நினைத்தன. கழுதையும் நாயும் ஒரு பெரிய மரத்தின்கீழே படுத்தன;

கோழியும் பூனையும் அம்மரத்தின்மேல் ஏறிக்கொண்டன. கோழி மாத்திரம் உச்சிக்கிளையில் ஏறிக்கொண்டு அங்கேயே சுகமாயிருந்தது. தூக்கம் வருவதற்குமுன் அது நாற்புறமும் நன்றாய்ச் சுற்றிப்பார்க்க, ஒரு புறத்தில் கொஞ்சதூரத்துக்கப்பால் சிறிதாய் விளக்குவெளிச்சமொன்று தெரியக்கண்டு தன் தோழர்களைக் கூவியுழைத்து, இதோ அருகாமையில் வெளிச்சமொன்றுதெரிகிறது; சமீபத்திலேயே ஒரு ஊர் இருப்பதுபோல் காண்கிறதென்று சொல்லக் கேட்டுக் கழுதை, அப்படியானால் நாம் எல்லாரும் எழுந்து அங்கேயே போய்ச் சேருவோம்; இங்கே மேயப் புல்லுகூட நன்றாயிருக்கவில்லை என்றுசொல்ல, நாயும், ஆம்; அவ்விடத்துக்குப் போவதுதான் சரி; அங்கேபோனால் பசையோடுகூட எலும்புகள் விழுந்து கிடக்கும், எடுத்துக் கடிக்கலாம் என்றது. அப்படியே அவையெல்லாம் எழுந்து அந்த விளக்குவெளிச்சத்தை நோக்கிச்சென்றன. போகப்போக அவ்விடம் நெருங்கவே வெளிச்சமும் அதிக ஒளியாய்ப் பிரகாசித்தது. அவ்விடம் திருடர்களெல்லாம் இரவில்வந்து கூடும்படியாக நடுக்காட்டிலே கட்டிக்கொண்டிருந்த ஒரு குடிசை; இவை நான்கும் அவ்விடம்போய்ச் சேர்ந்தபோது அவ்வீட்டுக்குள் திருடர்களெல்லாரும் வந்துசேர்ந்து தீனிதின்கிற தருணமாயிருந்தது. இவையெல்லாம் அவ்வீட்டோரத்திலேபோய் நின்றபிறகு, அவைகளுள் கழுதை மிகவும் பெரிய பிராணியாதலால், அது சாளரத்தின்வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தது. அதைக் கண்டு கோழி, ஓ வெள்ளைக்குதிரையே உள்ளே என்னதெரிகிறது? அங்கே என்ன விசேஷம்? என்று கேட்டதற்கு, கழுதை, இங்கேயா? கலங்களில் புசிக்கப் பலவித மதுரமான பண்டங்களும் பானவகைகளும் வைத்துக்கொண்டு அதைச் சுற்றிப் பல திருடர்கள் உட்காந்திருக்கிறார்கள் என்றுசொல்லக்கேட்டுக் கோழி, அப்படியா? ஆனால் இதுதான் நல்ல தருணம்; நாம் எல்லாரும் உள்ளே போகவேண்டுமென்றது.

ஆம், ஆம், எனக்குக்கூட அதுதான் விருப்பமாயிருக்கிறது என்று கழுதை சொல்ல, அவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, அந்தத் திருடர்களைத் துரத்திவிட்டுத் தாம் எல்லாம் உள்ளே புகுவதற்குத்தகுந்த உபாயம் என்னவென்று ஆலோசிக்கலாயிற்று. சிறிதுநேரம் ஆலோசித்துக் கடைசியில் ஒருவிதமாய்த் தீர்மானஞ்செய்தன. அதன்படியே கழுதை தன் முன்னங்கால் இரண்டையும் ஜன்னலின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு கிழேநிற்க, நாய் அதன் முதுகில் ஏறிக்கொண்டது. பூனை நாயின்மேல் ஏறிக்கொள்ள, கடைசியில் கோழி பறந்தெழும்பிப் பூனையின்மேல் உட்காந்தது. இவ்வளவானபிறகு அவைகளின் சங்கேதப்படியே எல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து பாட்டுபாட ஆரம்பித்தன. கழுதை ஊளையிட்டது; நாய் குரைத்தது; பூனை உறுமிற்று; கோழி

கூவிற்று. இவை ஒவ்வொன்றும் அததற்குள்ள பலத்தையெல்லாங்கொண்டு அந்தச் சாளரங்கூடப் பிளந்துபோம்படி உரத்துக்கூவின. ஒருநாளும் இல்லாத இந்தப் புதுமையான கூச்சலைக்கேட்டுத் திருடர்களெல்லாரும் மிகவும் பயந்து திகிலடைந்து உடனே எழுந்து, பூதமோ பேயோ பிசாசோ வந்திருக்கிறதென்று மனநடுங்கி ஓடிப்போனார்கள். சுவரோரத்தில் வந்துநின்றிருந்த நான்கு கூட்டாளிகளும் உடனே உள்ளே நுழைந்து கலங்களில் வைத்திருந்த உணவுகளையெல்லாம் ஒருமாதப் பட்டினிகிடந்தவைபோல அதிக ஆவலோடு ஒருநிமிஷத்தில் தின்றுவிட்டன.

அவை நான்கும் நன்றாய்த் தின்றனபிறகு தந்தமக்கேற்றவிடத்தில் படுத்துக்கொண்டன; முற்றத்தில் பரப்பியிருந்த வைக்கோலில் கழுதை படுத்துக்கொண்டது; நாய் ஒரு கதவின்கீழே சுருட்டிக்கொண்டது; பூனை அடுப்பங்கரைபோய்ப் படுத்தது; கோழி உயர எழும்பி ஒரு தூலத்தின்மேல் மடங்கிற்று. வழி நடந்துவந்த அலுப்பினால் எல்லாம் படுத்தவுடனே அயர்ந்து தூங்கிப்போயின; உடனே விளக்கும் தானே நின்றுபோயிற்று.

இராத்திரி யாவரும் மெய்ம்மறந்து தூங்குகிறவேளையில், ஓடிப்போய் வெகுதூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த திருடர்கள், தங்கள் வீட்டில் விளக்குவெளிச்சம் நின்றுபோயிருப்பதையும், ஒரு சத்தமுமின்றி அமைதியாயிருப்பதையும் கண்டார்கள். அது தெரிந்து அவர்களுடைய தலைவன், நாம் ஏதோ ஒரு கூச்சலைக்கேட்டு இப்படித் திகில்பிடித்திருக்கலாகாது என்றுசொல்லி மிக்க சமர்த்தனான ஒரு வீரனை அழைத்து, நீ போய் நமது வீட்டில் நடக்கிற செய்தியென்ன பார்த்துவாவென்று சொல்லியனுப்பினான். அப்படியே ஆகட்டுமென்று அவன் புறப்பட்டுத் தங்கள் வீட்டிற்குப்போய் கம்மென்று ஓசையடங்கியிருக்கக்கண்டு உள்ளே புகுந்து, வெளிச்சமில்லாமையால் விளக்கேற்றுவதற்காகச் சரேலென்று அடுப்பண்டைபோய், அங்கே பளபளவென்று பிரகாசித்துக்கொண்டிருந்த பூனையின் கண்ணைக் கொள்ளிக்கட்டையென்றெண்ணி அதன்மேல் ஒரு கந்தகவர்த்தியைக் கொண்டுவைத்து விளக்கேற்றப்பார்த்தான். குச்சைக்கொண்டு அவன் தன் கண்ணைக் குத்துவதாக நினைத்துப் பூனை உடனே அவன்மேற் பாய்ந்து பற்களாலும் நகங்களாலும் அவன் உடலை நன்றாய்ப் பீறி ரத்தம் பெருகச்செய்தது. அதைக்கண்டு அவன், ஐயோ! இதென்னவென்று பயந்து புறக்கடைவழியாய் ஓடிப்போகப்பார்த்தான். அங்கேபோய்க் கதவைத் திறக்கையில் அதின் கீழே படுத்திருந்த நாய் எழுந்து அவன்மேல் தாவிக் காலை நன்றாய்க் கவ்விப்பிடுங்கிற்று. ஓகோ! இதென்ன சங்கடமென்று முற்றத்திலிருந்த வைக்கோலின்மேற் குதிக்க,

அங்கே படுத்திருந்த கழுதை பின்னங்காலால் விண்விண்ணென்று நான்கு உதை உதைத்தது. இவ்வளவுமாத்திரமேயோ? இந்த ஆரவாரத்தினல் உத்திரத்தின்மேல் படுத்திருந்த கோழி விழித்துக்கொண்டு சிறகடித்துக்கூவ ஆரம்பித்தது.

இவைகளையெல்லாம் பார்க்கவே அந்தத் திருடன், இதென்ன விபரீதம்! இப்படிப்பட்ட சங்கடத்தை நான் ஒருநாளும் அனுபவித்ததில்லையேயென்று மனம் பதைக்கப்பதைக்க ஒரே ஓட்டமாய் ஓடித் தன் எஜமானனிடம் சேர்ந்தான். அவனைப்பார்த்து அந்த எஜமானன் வீட்டில்நடக்கிற விசேஷம் என்னவென்று கேட்க, அவன் ஐயா! அதை நான் என்னென்று சொல்வேன்! நமது வீட்டில் அநேகம் பேய்கள்வந்து குடிகொண்டிருக்கின்றன. ஒரு புறத்தில் ஒன்று வாளாயுதத்தைக்கொண்டு என் உடம்பு முழுதும் பீறிற்று; முகத்தில் எலும்புகூட முறிந்துபோயிற்று. கதவண்டையொன்று கத்தியும் கையுமாய் உட்காந்திருக்கிறது. அங்கே போனவுடனே அது என் காலை வெட்டப்பார்த்தது. அதினின்றும் மெதுவாய்த் தப்பித்துக்கொண்டு கொஞ்சம் அப்பால் ஒதுங்கினேன்; நடுவீட்டில் பெரும்பூதம் ஒன்று கையில் இருப்புத்தடியை வைத்துக்கொண்டு இடுப்பொடியப் புடைத்தது. இவைமாத்திரமேயல்ல; இறப்பில் நியாயாதிபதி ஒருவன் உட்காந்திருக்கிறுன். அவன் என்னைப் பார்த்தவுடனே, பிடித்துவா இங்கே அந்தத் திருடனை; பிடித்துவா அவனை என்று கூவினுன். அது தெரிந்து நான் திரும்பிப்பாராமல் ஒரு குதியாய்க் குதித்து ஓடி வந்துவிட்டேன் என்றுன்.

அந்த அதிசயமான நன்னடத்தையைக்கேட்டுத் திருடர்கள் எல்லாரும் பயந்தாலும், பெருத்த அபாயமொன்றுமில்லாமல் இவ்வளவோடு தப்பினேமேயென்று சந்தோஷமடைந்து அப்படியே நடுக்காட்டில் ஓடிப்போனுர்கள். மறுபடி அவ்வீட்டுக்குத் திரும்பவேயில்லை. பட்டணத்துப் பாடகர்கள் பெற்ற பாக்கியத்தைப் பாருங்கள்! அன்றுமுதல் கழுதையும் நாயும் பூனையும் கோழியும் ஆகிய நான்கும் நாளுக்குநாள் தங்களால் கூடியவரையில் உழைத்து வேலைசெய்து வெகு க்ஷேமமாய் அங்கேயே குடிகொண்டிருந்தன.

சமாசாரம்.

அங்கிலேயருடைய நிலை.—ஐரோப்பாவிலே முன்னே ருஷியருக்கும் துருக்கருக்கும் நடந்த யுத்தத்தினால் தங்களுக்கு என்ன அபாயம் நேரிடுமோவென்று அங்கிலேயர் பயந்துகொண்டிருக்க, அத்தருணத்தில் அது ஒரு நன்மையாகவே முடிந்தது. ஆயினும் அதனால் உண்டான ருஷியருடைய பயம் அடங்காமலிருக்கையிலேயே, தண்ணீரில் ஒரு பொருளை ஓரிடத்தில் அமுக்கினால் அது மற்றோரிடத்தில் தானே தலையெடுப்பது போல், ஐரோப்பாவில் அடங்கின யுத்தம் ஆப்கன்தேசத்தில் தலைகாட்டிற்று. அது இப்படியென்று ஒருவிதத்திலும் முடிவுதெரியாமல் குழப்பமாயிருக்க, இப்போது நூதனமாய் ஆப்பிரிகாதேசத்துத் தென்னண்டைக் கோடியில் ஒரு மூலையிலே ஜூலு என்னும் காபிரி ஜனங்கள் அவ்விடத்திலுள்ள அங்கிலேயரோடு சண்டைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தப் போராட்டம் எப்படியாகுமோ தெரியாது. அந்த யுத்தத்தை நடத்துவதற்காக ஒன்றரைக்கோடி ரூபாய் செலவுக்கு வேண்டுமென்று மந்திரிகள் பார்லிமெண்டு சபையாரைக் கேட்டிருக்கிறார்களாம். அதற்கும் முடிவு தெரியவில்லை. இவைமாத்திரமேயன்றி, பர்மாதேசத்தில் முன்னிருந்த அரசன் இறக்கப் பின்பட்டம் தரித்துக்கொண்ட ராஜகுமாரன் தனக்கு விரோதமான ராஜபந்துக்களையெல்லாம் கொலைசெய்யத் தொடங்கினதைப்பற்றி அத்தேசத்தில் கலகம் விருத்தியாக, இந்தியாதுரைத்தனத்தார் இக்கொலைபாதகங்களை அடக்கவும் சுராஜ்யத்தை ரக்ஷித்துக்கொள்ளவும் படைகளைக் கூட்டி அனுப்ப யோசித்திருக்கிறார்களாம்; இப்படி நாநாதிசையிலும் தொல்லைகள் நேரிட்டிருக்கின்றன. ஆயினும் ருஷியர்சண்டைமுதலிய தொல்லைகளெல்லாம் நமது துரைத்தனத்தார்க்கு அனுகூலமாய் முடிந்ததுபோலவே இவைகளும் நன்குமுடியுமென்று எதிர்பார்க்கிறோம்.

இப்போது நம்முடைய துரைத்தனத்தார்க்கு நேர்ந்திருக்கிற சங்கடங்களைச் சிமையில் பத்திராதிபர் ஒருவர் ஒரு வினோதமாகச் சித்திரித்துக் காட்டியிருக்கிறார். அதாவது: இங்கிலாந்தை ஒரு விருஷபமாக்கி அதன்மேல் முன்னே கம்பீரமாய் ருஷியாவும், அதற்குப்பின்னால் தலைதொங்கவிட்டு என்னைக் கொஞ்சம் கைதூக்கிவிடீர்களாவென்று மன்றாடுகிற விதமாய்த் துருக்கிதேசத்து வடிவமும், அதன்பின்னால் ஆப்கன்தேசமும், கடைசியில் இந்தக் குழப்பத்தில் எனக்கும் கொஞ்சம் இடங்கொடுங்களென்று கேட்பதுபோல் அந்த விருஷபத்தைக் கைகளால் எட்டிப்பிடித்துக்கொண்டு ஜூலு என்கிற தேசமுமாக வினோதமாய்ப் படமெழுதிப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார்.

ஆப்கன்தேசத்துச் சண்டையும் இன்னும் குழப்பமாயேயிருக்கிறது. ஆயினும் நமது துரைத்தனத்தார் பற்பல பட்டணங்களைப் பிடித்திருக்கிறார்கள். ருஷியருடைய உதவியைத்தேடி ஓடிப்போன அமீர்மட்டும் ராஜவிரணம்கண்டு இறந்துபோனதாய் வதந்தியுண்டாயிருக்கிறது.

Printed at the S. P. C. K. Press.